சேலம் சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளரின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : கோ.யோகவிஷ்ணு, B.Sc., PGDDT.,HDCM.,
கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர்,
சேலம் சரகம், சேலம்.

ந.க.2614 /2020 பதொ — நாள் : 06.12.2021

பொருள் : நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டு – தொகுதி – IV–ன் கீழ் அடங்கிய இளநிலை உதவியாளராக செல்வி.மா.வைத்தீஸ்வரி நியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்தது – பணிவரன்முறைப்படுத்தி– ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.2360/PSD-1 2020, நாள்: 30.05.2020
2. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) அவர்களின் க.எண்.11800/2020/பதொ3, நாள்:24.07.2020
3. சேலம் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர்/ பணியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.4766/2020பதொ நாள்:29.07.2020
4. சேலம் சரக துணைப்பதிவாளரின் செயல்முறை ந.க.2614/2020 பதொ நாள்:03.08.2020
5. அரசு ஆணை எண்.101 பொது (பணிகள்–9) நாள்: 01.12.1962

*********

ஆணை :

தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கிய தொகுதி – IV–ன் கீழான பணியிடங்களில் தற்காலிக இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை (1)–இல் காணும் கடிதப்படி, கூட்டுறவுத் துறையில் பணியமர்வு செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.மா.வைத்தீஸ்வரி பார்வை (2)–இல் காணும் கடிதப்படி, சேலம் மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)–இல் காணும் செயல்முறை ஆணையின்படி, சேலம் சரக துணைப்பதிவாளர் அலுவலகத்தில் பணியிடம் வழங்கப்பட்டு, பார்வை (4)–இல் காணும் பணியமர்வாணையின்படி சேலம் சரக துணைப்பதிவாளர் அலுவலகத்தில் 03.08.2020 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை (5)–ல் காணும் அரசு ஆணையின்படி இவர் பணியில் சேர்ந்த நாளான 03.08.2020 முற்பகல் முதல் இவருடைய பணிவரன்முறைப்படுத்தி (Regularisation of Service) ஆணையிடப்படுகிறது.

பணி வரன்முறையானது சென்னை உயர் நீதிமன்றம் / சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையாக உள்ள தொகுதி IV 2018–2019 மற்றும் 2019–2020–ம் ஆண்டிற்கான நேரடி பணிநியமனம் தொடர்பான நீதிப்பேராணை வழக்குகளின் மீது வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டதாகும்.

06.12.2021

துணைப்பதிவாளர்
சேலம் சரகம், சேலம்.

பெறுநர்
செல்வி.மா.வைத்திஸ்வரி,
இளநிலை உதவியாளர்
துணைப்பதிவாளர் அலுவலகம், சேலம் சரகம், சேலம்.

படி :
1. இருப்பு கோப்பு
2. பணிப்பதிவேடு

படி சமர்ப்பிக்கப்படுகிறது :
கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்
சேலம் மண்டலம், சேலம்.

Scanned by CamScanner